Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 07

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. “தெய்வம் தொழாஅள் தன் கொழுநன்” என்ற தொடரில் தொழாஅள் என்பது
    1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை 3. ஐகாரக்குறுக்கம் 4. ஔகாரக்குறுக்கம்

02. உயிரளபெடையின் மாத்திரை
    1. இரண்டு 2. ஒன்று 3. அரை 4. மூன்று

03. பின்வரும் சொற்களுள் ஆய்தக்குறுக்கமாக அமையாத சொல்
    1. அஃறிணை 2. அஃது 3. முஃடீது 4. பஃறொடை

04. பின்வரும் சொற்களுள் மொழிமுதற்போலியாய் அமைவது
    1. அரைசு 2.சாம்பர் 3. அய்யர் 4. ஐயர்

05. சரியான இனவெழுத்தினை கொண்டிராத எழுத்துச்சோடி
    1. ஐ - இ 2. ஓ - ஒ 3. ஈ - இ 4. ஊ - ஒ

பகுதி 2

01. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?

2. சமூகஅமைப்பின் அத்திவாரமாக அமைவது எது என குறிப்பிடப்படுகின்றது?

3. எப்போது உலகம் இனிமை தருவதாக அக்கட்டுரை குறிப்பிடுகின்றது?

4. சமூகத்தின் அடிப்படை அமைப்பினை நிலைகுலைய செய்பவர்கள் யாவர்?

5. இலட்சியவாதிகளின் பண்பு பற்றி யாது கூறப்படுகின்றது?

6. இலக்கியத்திறவுகோல் என குறிப்பிடப்படுவது யாது?

7. நாம் இலக்கியம் கொண்டு எப்போது இடர்ப்படுவோம் என குறிப்பிடப்படுகின்றது?

8. சிலப்பதிகாரம் என்ற நூல் யாரால் எழுதப்பட்டது?

9. அவ்விலக்கியத்தில் பேசப்படுகின்ற இலட்சியக்கதாபாத்திரங்கள் இரண்டினை குறிப்பிடுக

10. இலட்சியம் பற்றி குறிப்பிடப்படுபவற்றை சுருக்கமாக குறிப்பிடுக